# சங்கரன்கோவில் நகராட்சி

**2023ம் ஆண்டு ஜுன் மாதம் 16.06.2023 ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு நடைபெற உள்ள நகர்மன்ற அவசரக்கூ ட நிகழ்ச்சி நிரல்:-**

**பொருள் எண்** – 01

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆடித்தபசு திருவிழா 2023ம் ஆண்டில் **21.07.2023**ல் கொடியேற்றத்துடன் துவங்கி **01.08.2023** முடிய 12 நாட்கள் சிறப்பாக நடைபெற உள்ளது. ஆடித்தபசுத் திருவிழா **31.07.2023** அன்று நடைபெறவுள்ளது. மேற்படி திருவிழா அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட **(Notified Festival)** திருவிழாவாகும். இத்திருவிழாவிற்கு மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கில் பக்தர்கள் வருகை தருவார்கள். மேற்படி திருவிழாவிற்காக நகராட்சியின் மூலம் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிப்பணிகள், குடிநீர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு பணிகள் சிறப்பான முறையில் செய்யவும், திருவிழாவிற்காக அமைக்கப்படும் தற்காலிக பேருந்து நிலையங்கள், தற்காலிக கழிப்பறைகள், தற்காலிக சிறுநீர் பிறைகள், தற்காலிக தண்ணீர் பந்தல்கள் மற்றும் ஆடித்தபசுத் திருவிழா நடைபெறும் தெற்குரதவீதியில் பக்தர்களுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், தடுப்பு கட்டைகள் (பாரிகாட்) அமைத்தல் மற்றும் தற்காலிக போலீஸ் அவுட்போஸ்ட், மருத்துவக்குழு தங்குவதற்கு தற்காலிக செட் அமைத்தல் மற்றும் ஆடித்தபசு திருவிழாவிற்காக சிறப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சிப்பொறியாளர் மற்றும் சுகாதார அலுவலரால் தயார் செய்யப்பட்டுள்ள **படிவம் I** ன் அறிக்கையின்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.**33,39,072/–** தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள **படிவம் – I** அறிக்கை மற்றும் தேவைப்படும் கூடுதல் செலவினத்திற்கும் மற்றும் மேற்கண்ட **படிவம் I** அறிக்கையை சென்னை, பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களின் ஒப்புதல் பெறவும் மன்றத்தின் அனுமதிக்காக. (கோப்பு எண்.1539/2023/எச்1)

**பொருள் எண்** – 02

சங்கரன்கோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் பிளிச்சிங்பவுடர், கருப்பு பினாயில், மற்றும் வெள்ளை பினாயில் இருப்பு குறைவாக உள்ளதாலும் மற்றும் நான்கு MCC க்கும் தேவையான COMPUTER WEIGHING MACHINE WITH PRINTER வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் தனது 29.05.2023 தேதியின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட விபரப்படி பொருள்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1516/2023/எச்1)

<u>அலுவலக குறிப்பு</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**பொருள் எண்** – 03

இந்நகராட்சிப்பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்துவதற்கு விலங்குகள் நலவாரியம் மூலம் அனுமதிக்கப்பட்ட நிறுவனம் **Rajeswari Gaushala Trust,** மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் <u>**வெறிநோய் தடுப்பூசி பணி**</u> செய்திடவும் கண்காணிக்கும் குழு அனுமதி வழங்கியுள்ளது. எனவே பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன்கருதியும் மேற்கண்ட

பணிகளை **Rajeswari Gaushala Trust** நிறுவனம் மூலம் விதிமுறைகளின் படி **<u>வெறிநோய் தடுப்பூசி மற்றும் கருத்தடை</u>** அறுவைச்சிகிச்சைப்பணிகள் மேற்கொள்ள உத்தரவு வழங்கவும், அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. **(கோப்பு எண்–564/2022/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்காக.

**பொருள் எண்** – 04

2021-2022 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (2.0) திட்டத்தின் கீழ் அம்பேத்கர் நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.24.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் மதிப்பீட்டில் கழிப்பிடத்தின் மேல்பகுதியில் கம்பி அடித்தல், தட்டு ஓடு பதித்தல் ஆகிய பணிகள் இடம் பெறவில்லை என்பதால் அப்பணியை மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது. வேலைதளத்தின் தன்மையை கருத்திற்கொண்டு அடித்தளம் கூடுதலான உயரத்திற்கு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே கட்டடத்திற்கு மின்சார பணிகள் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.3.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள □□□□ நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்** – 05

2022-2023 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (2.0) திட்டத்தின் கீழ் மீரான்சேட் காலனியில் சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.24.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு முறையே பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் மதிப்பீட்டில் கழிப்பிடத்தின் மேல்பகுதியில் கம்பி அடித்தல், தட்டு ஓடு பதித்தல் ஆகிய பணிகள் இடம் பெறவில்லை என்பதால் அப்பணியை மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கில் டைல்ஸ் பதித்தல், பெயிண்டிங் அடித்தல் மற்றும் மின்சார பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.5.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள □□□□ நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்** – 06

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (2.0) திட்டத்தின் கீழ் மீரான்சேட் காலனி, அம்பேத்கர் நகர் மற்றும் பாட்டத்தூர் கட்டப்பட்டு வரும் சமுதாய கழிப்பிடத்தின் முகப்பு தோற்றத்தை (Front Elevation) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து வரப்பெற்றுள்ள மாதிரி முகப்புத்தோற்றத்தை போன்று வடிவமைக்குமாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும், திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் அறிவுறுத்தியுள்ளதால் இப்பணியை செய்து முடிக்க வேண்டியுள்ளது.

1. பாட்டத்தூர் சமுதாய கழிப்பிடம் முகப்புத்தோற்றம் – ரூ.2.90 இலட்சம்
2. திருவேங்கடம் – கழுகுமலை டைவர்சன் சாலை சமுதாய கழிப்பிடம் முகப்புத்தோற்றம் – ரூ.2.90 இலட்சம்
3. மீரான்சேட் காலனி சமுதாய கழிப்பிடம் முகப்புத்தோற்றம் – ரூ.2.90 இலட்சம்

மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.8.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள □□□□ நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் – 07

2021-2022 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (2.0) திட்டத்தின் கீழ் பாட்டத்தூர் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.309, நாள் 17.03.2023 அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்க்கப்பட்டதில் 28.04.2023ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை | மதிப்பீட்த்தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.எம்.போத்தி ஒப்பந்ததாரர் | ரூ.5,60,000 | - | 0.01% |
| 2. | திரு.கே.நிஷார் ஒப்பந்ததாரர் | ரூ.5,60,000 | 0.07% | - |

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.எம்.போத்தி என்பவர் மதிப்பீட்டுத்தொகையைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.போத்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

## பொருள் எண் – 08

2021-2022 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (2.0) திட்டத்தின் கீழ் திருவேங்கடம் – கழுகுமலை டைவர்சன் சாலையில் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.284, நாள் 17.03.2023 அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்க்கப்பட்டதில் 28.04.2023ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை | மதிப்பீட்த்தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.கே.ராஜா முகமது ஒப்பந்ததாரர் | ரூ.9,70,000 | - | 0.01% |
| 2. | திரு.கே.நவாஸ்கான் ஒப்பந்ததாரர் | ரூ.9,70,000 | 0.03% | - |

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.கே.ராஜா முகமது என்பவர் மதிப்பீட்டுத்தொகையைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.ராஜா முகமது என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

## பொருள் எண் – 09

இந்நகராட்சி வார்டு எண்.16ல் புதுமனை 4ம் தெருவிலுள்ள மின்மோட்டார் அறை மிகவும் பழுதடைந்து உபயோகமில்லாமல் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி புதியதாக மோட்டார் அறை அமைத்து பொதுமக்கள் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ.1.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள **குடிநீர்** நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண் – 10

இந்நகராட்சி வார்டு எண்.02ல் சங்குபுரம் 6ம் தெருவிலுள்ள வடிகால் மிகவும் சேதமடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி தெருவிலுள்ள வடிகால் மற்றும் சிறுபாலத்தை மறுசீரமைப்பு செய்ய ரூ.1.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள □□□□ நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் – 11**

**2021-2022ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் பயன்பாட்டிற்கு தேவையான மேசைகள், நாற்காலிகள், அலமாரிகள் மற்றும் பிற வசதிகள் ஏற்படுத்துவதற்கு சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரை கடித ந.க.எண்.001/2022/வ.அ1, நாள் 12.05.2023ன்படி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்திற்கு தேவையான மேற்கண்ட பொருட்களை நகராட்சி நிதியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் இதில் மொத்தமாக ரூ.16.03 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டு ஏற்கனவே உள்ள விரிவான திட்ட மதிப்பீட்டில் உள்ள ரூ..4.20 இலட்சம் போக மீதி தொகையான ரூ.11.83 இலட்சத்திற்கு பொருட்கள் வாங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு**

1) **மன்றம் அனுமதிக்கலாம்**
2) **பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள ரூ.11.83 இலட்சம் பொது / 15வது நிதிக்குழு நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் – 12**

**சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண்.6, பாரதியார் 5ம் மற்றும் 6வது தெருவில் உள்ள சிறுமின்விசை மோட்டார் அறை மற்றும் சின்டெக்ஸ் பொருத்தப்பட்டு உள்ள அடித்தளம் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது. ஆகையால் குடிநீர் பணியின் அவசியம் கருதி இப்பணியை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ரூ.2.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு**

1) **மன்றம் அனுமதிக்கலாம்**
2) **பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

பொருள் எண் – 13

கீழமை நீதிமன்றங்களில் (Subordinate Courts) சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்படும் வழக்குகளுக்கு சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் சார்பாக வாதிடவும், வழக்கு நடத்திடவும், திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக 24.01.2022ம் தேதிய மின்னஞ்சலில் இணைத்து வரப்பெற்ற பட்டியலில் திரு.பி.முனியசாமி (Ms.625/1995) வழக்கறிஞரை சங்கரன்கோவில் நகராட்சி வழக்கறிஞராக (Standing Council) நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. கீழமை நீதிமன்றங்களில் (Subordinate Courts) நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழமை நீதிமன்றங்களில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்தும் தொடரப்படும் வழக்குகளில் சங்கரன்கோவில் நகராட்சி சார்பாக வழக்கு தொடரவும் நகராட்சி வழக்கறிஞராக திரு.பி.முனியசாமி (Ms.625/1995) வழக்கறிஞரை நியமனம் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.4178/2006/சி1)

இடம் – சங்கரன்கோவில் நகர்மன்றத் தலைவர்
நாள் – 15.06.2023. சங்கரன்கோவில்.